**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

**[அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./TR - 5 - 2-(2), 2007 ஆகஸ்டு 9ஆம் நாளிட்டது]**

**[கடித எண் த.மி.ஒ.ஆ./AD(L)/F.அறிவிக்கைகள் /D699/2007]**

2003ஆம் ஆண்டு மின்சாரச்சட்டத்தின், (மத்தியச் சட்டம் 36/2003) 181 ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 61ஆம் பிரிவின்படி, 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகளில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் குறித்துரைக்கப்படுவதாலும், மற்றும் 2005 ஆகஸ்டு, 3ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI - பிரிவு–2இல் அது வெளியிடப்பட்டிருப்பதாலும்,

மற்றும், மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் (CERC) வனையப்பட்ட(framed) ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்கி நடப்பதற்கு ஒழுங்குமுறை விதிகளைச் செயற்படுத்துகையில் சில இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு மேற்சொன்ன ஒழுங்குமுறை விதிகளின் ஒரு சில வகைமுறைளைத் திருத்தம் செய்வது அவசியமெனக் கருதுவதாலும், மற்றும் அத்தகைய திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள் முந்திய வெளியீட்டிற்கு உட்பட்டிருப்பதாலும், அதற்கிணங்க முந்திய வெளியீடு ஏற்றுக் கொள்ளப்படலாகிறது என்பதாலும்,

இப்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2006) இன் 61ஆம் பிரிவின்படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும், மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அதிகாரங்கள் அனைத்தையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம், 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டண வீதம் நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகளுக்காக, பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறை விதிகளை குறித்துரைக்கிறது :-

## 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதம் நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) (இரண்டாம் திருத்தம்) ஒழுங்குமுறை விதிகள்.

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

(i) இந்த ஒழுங்குமுறை விதிகள், 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டணவீதம் நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) (இரண்டாம் திருத்தம்) ஒழுங்குமுறை விதிகள், என்று வழங்கப்பெறும்.

(ii) இவை, தமிழ்நாடு அரசிதழில் அவை வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**2. 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டணவீதம் நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகளின் 22ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல்.**

(இதன்பின்பு, இதில் முதன்மை ஒழுங்குமுறைவிதிகள் என்று குறிப்பிடப்படும்) 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டண வீதம் நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள் ) ஒழுங்குமுறை விதிகளின் 22ஆம் ஒழுங்குமுறை விதியின், (1) ஆம் உள்–ஒழுங்குமுறை விதியிலுள்ள இரண்டாம் வரம்புரை (Proviso) விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**3. முதன்மை ஒழுங்குமுறை விதிகளின் 24ஆம் ஒழுங்குமுறைவிதியைத் திருத்தம் செய்தல்:**

முதன்மை ஒழுங்குமுறை விதிகளின் 24ஆம் ஒழுங்குமுறை விதியில், கடைசியிலுள்ள “குறிப்பு” விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)**

**ஆர். பாலசுப்பிரமணியன்**
செயலாளர்